# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 7 | 4 Pages | 08.08.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| 4மலர் : 01 | இதழ் : 7 | 4 பக்கங்கள் | 08.08.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மத்திய அரசு ராகுல் காந்தியைக் கண்டு பயப்படுகிறது: சஞ்சய் ராவத் தாக்கு



மும்பை, ஆக. 8

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு அவதூறு வழக்கில் சூரத் கோர்ட்டு 2 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. இதையடுத்து அவரது எம்.பி. பதவி பறிக்கப்பட்டது. இதற்கிடையே, கடந்த 4ம் தேதி ராகுல் காந்திக்கு சூரத் கோர்ட்டு வழங்கிய தண்டனையை சுப்ரீம் கோர்ட்டு நிறுத்தி வைத்தது. இதையடுத்து, ராகுல் காந்தியின் தகுதி நீக்கத்தை ரத்து செய்து எம்.பி. பதவியை உடனடியாக வழங்க வேண்டும் என காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், ராகுல் விவகாரம் தொடர்பாக உத்தவ் தாக்கரே சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத் கூறுகையில், ராகுல் காந்தியை எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட வேகம், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு பிறகு அதை ரத்து செய்வதில் இல்லை. சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு வந்து 3 நாட்கள் ஆகிவிட்டது. ஆனாலும் சபாநாயகர் ராகுல் காந்தியின் எம்.பி. பதவி நீக்கத்தை ரத்து செய்யவில்லை. மத்திய அரசு ராகுல் காந்திக்கு பயப்படுகிறது. எனவே அவரின் தகுதி நீக்கத்தை ரத்துசெய்து எம்.பி. பதவியை வழங்காமல் உள்ளது என தெரிவித்தார்.

## மணிப்பூரில் பிரேன் சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை திரும்ப பெற்றது: குக்கி மக்கள் கூட்டணி



இம்பால், ஆக. 8

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக வன்முறை நீடித்து வருகிறது. குக்கி இனத்தவர்களுக்கும், மெய்தி மக்களுக்கும் இடையே பழங்குடியின நீடித்து வரும் மோதலால் மணிப்பூர் மாநிலம் தொடர்ந்து பதற்றமாகவே இருந்து வருகிறது. மணிப்பூரில் பா.ஜ.க. ஆட்சி நடத்தி வருகிறது. முதல் மந்திரியாக பிரேன் சிங் பதவி வகித்து வருகிறார். இந்நிலையில், மணிப்பூரில் ஆளும் பிரேன் சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை திரும்ப பெறுவதாக குக்கி மக்கள் கூட்டணி அறிவித்துள்ளது. இதுதொடர்பாக, குக்கி மக்கள் கூட்டணி கட்சி தலைவர் டோங்மங் ஹவோகிப் ஆளுநர் அனுசுயா உய்கேக்கு கடிதம் அனுப்பி உள்ளார். குக்கி மக்கள் கூட்டணிக்கு 2 எம்.எல்.ஏக்கள் மட்டுமே உள்ளதால், ஆதரவை வாபஸ் பெற்றாலும் மணிப்பூர் அரசுக்கு எந்த ஆபத்தும் இல்லை என தெரிகிறது.

# உங்கள் கனவுகளை எல்லாம் நிறைவேற்றி வருகிறோம் தலைவரே... முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருக்கமான டுவிட்

சென்னை, ஆக. 8

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது: வங்கக் கடலோரம் வாஞ்சை மிகு தென்றலின் தாலாட்டில் கனிந்த இதயத்தோடு ஓய்வெடுக்கும் தலைவர் கலைஞரே! உங்களைக் காண ஆகஸ்ட் 7 அதிகாலையில் அணி வகுத்து வருகிறோம்! உங்களுக்குச் சொல்ல ஒரு நல்ல செய்தி கொண்டு வருகிறேன்... 'உங்கள் கனவுகளை எல்லாம் நிறைவேற்றி வருகிறோம் தலைவரே!" என்பதுதான் அந்த நல்ல செய்தி! நீங்கள் இருந்து செய்யவேண்டியதைத் தான் நான் அமர்ந்து செய்து கொண்டிருக்கிறேன். 'பாதிச் சரித்திரத்தை நான் எழுதிவிட்டேன்; மீதியை என் தம்பி கருணாநிதி எழுதுவான்' என்றார் காலம் வழங்கிய இரண்டாவது வள்ளுவன் எம் அண்ணா. 95 வயது வரை நாளெல்லாம் உழைத்தீர்கள். இனம் மொழி நாடு காக்க ஓய்வெடுக்காமல் உழைத்தீர்கள். உங்கள் உழைப்பின் உருவக வடிவம் தான் இந்த



நவீனத் தமிழ்நாடு. நீங்கள் உருவாக்கிய நவீனத் தமிழ்நாட்டை இடையில் புகுந்த கொத்தடிமைக் கூட்டம் சிதைத்ததன் விளைவாக தாழ்வுற்றது தமிழ்நாடு. தாழ்வுற்ற தமிழ் நாட்டை மீட்டெடுத்து மீண்டும் உங்கள் ஆட்சி காலத் தமிழ்நாடாக உருவாக்கி வளர்த்தெடுக்க எந்நாளும் உழைத்து வருகிறேன். "ஸ்டாலின் என்றால் உழைப்பு ... உழைப்பு... உழைப்பு" என்றீர்கள். அந்தக் கரகரக் குரல் தான், கண்டிப்புக் குரலாக என்னை உழைக்க வைத்துக் கொண்டிருக்கிறது. "எனக்குப் பின்னால், இனமானப் பேராசிரியருக்குப் பின்னால் யாரென்று கேட்டால் இங்கே அமர்ந்திருக்கும் ஸ்டாலின்" என்று எந்த நம்பிக்கை வைத்துச் சொன்னீர்களோ அந்த நம்பிக்கையைக் காக்கவே உழைத்துக் கொண்டிருக்கிறேன். எட்டுக் கோடித் தமிழ் மக்களும் ஏதாவது ஒருவகையில் பயனடையும் திட்டத்தைத் தீட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை தித்திக்கும் மக்களாட்சி மாண்போடு நடத்தி வருகிறோம். ஒற்றைக் கையெழுத்துப் போட்டால் அது கோடிக்கணக்கானவர்களை மகிழ்விக்கிறது. ஒரே ஒரு உத்தரவு லட்சக்கணக்கானவர்களை இரட்சிக்கிறது. தமிழ்நாடு தலைநிமிர்கிறது. இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உயர்கிறது. உங்கள் கனவுகள் நிறைவேறும் காலமாக ஆகிவிட்டது, தலைவரே! நீங்கள் இருந்து செய்யவேண்டியதைத் தான் நான் அமர்ந்து செய்து கொண்டிருக்கிறேன்.

இதற்கு இடையில் 2024ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் எங்களை எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கிறது. வழக்கமாய் ஐந்தாண்டுக்கு ஒரு முறை வரும் தேர்தல் அல்ல இது.

இந்தக் கட்சி ஆட்சியா? அந்தக் கட்சி ஆட்சியா? என்பதற்கான விடையல்ல இந்தத் தேர்தல். இந்தியாவில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா? இருக்க முடியாதா? என்பதற்கான தேர்தல் இது. நீங்கள் சொல்வீர்களே 'தமிழ்நாட்டில் கால் பதித்து நின்று இந்தியாவுக்காகக் குரல் எழுப்ப வேண்டும்' என்று! அப்படித் தான் இந்தியாவுக்கான குரலை எழுப்பத் தொடங்கி இருக்கிறோம்! அனைத்துக்கும் தொடக்கம் தமிழ்நாடு. இந்தியாவுக்கான பாதை அமைத்ததும் தமிழ்நாடு. இது இந்தியா முழுமைக்கும் பரவிவிட்டது. சுயமரியாதை சமூகநீதி சமதர்மம் மொழி, இன உரிமை மாநில சுயாட்சி கூட்டாட்சி இந்தியாஎன்ற உங்களது விரிந்த கனவுகளை இந்தியா முழுமைக்கும் அகலமாக விரித்துள்ளோம்.

தி.மு.க. மாநிலக் கட்சி தான்! அனைத்து மாநிலங்களுக்கும் உரிமையைப் பெற்றுத் தரும் கட்சியாக இருக்க வேண்டும் என்ற உங்களது அந்தக்கனவும்நிறைவேறப்போகும் காலம்.. வரும் காலம்! உங்கள் நூற்றாண்டு நீங்கள் உருவாக்கிய நவீனத் தமிழ்நாட்டை நீங்களே ஆள்கிறீர்கள்.

நீங்களே வாழ்கிறீர்கள். நீங்களே வழிநடத்துகிறீர்கள். உங்கள் வழி நடக்கும் எங்கள் வெற்றிக்கு வாழ்த்துங்கள்! வென்று வந்து காலடியில் அதனை வைக்கின்றோம் தலைவரே! அன்புடன் மு.க.ஸ்டாலின் இவ்வாறு அந்த டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார்.

# STRONG AYAN MAN AND WOMEN 2023 DEADLIFT COMPETITION





























திருப்பூர் மாவட்டம் ஆகஸ்ட் 6ந்தேதி அன்று அயன் ஃபிட்னஸ்மற்றும்திருப்பூர்மாவட்டஉடற்பயிற்சியாளர் சங்கத்தின்சார்பாகவளுதூக்கும்போட்டிநடைபெற்றது. வளு தூக்கும் போட்டியில் *Strong Ayan Man and Women 2023 DEADLIFT COMPETITION* சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அதில் முதல் பிரிவாக 13 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் போட்டியில் முதல் பரிசு மஞ்சுநாத் (கோவை) மற்றும் ஆண்கள் பிரிவில் 55, 61, 67, 75, 80, 85, +85 ஆகிய 7 பிரிவுகள் நடந்தது.

இதில் 61 கிலோ எடை பிரிவில் 212.5 கிலோ எடையைதூக்கி கோவை மாவட்ட வீரர் M.கார்வேந்தன் முதல் பட்டம் வென்றார். பின் பெண்களுக்கான போட்டி: 52, 59, 64, 75, 80, + 80 போட்டியில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த வீராங்கனை S.ரேனுகா தேவி 52 கிலோ எடை பிரிவில் 120 கிலோ தூக்கி முதல் பட்டம் வென்றார்.

மேலும் அனைத்து பிரிவுக்கும் 1 முதல் 10 வரை பரிசுகள், பதக்கம், கேடயம், சான்றிதழ், டிஷர்ட் மற்றும் பணமுடிப்புகளும் பரிசாக வழங்கப்பட்டது. இந்த போட்டி திருப்பூர் மாவட்ட உடற்பயிற்சி உரிமையாளர் சங்க தலைவர் M.அருள்காந்தி, செயளாலர் N.(அயன்) பிரபு, பொருளாளர் V.ஜெயமுருகன் மற்றும் நமது தின கனி ஆசிரியர் கனி ராஜ் உள்பட பலர் கலந்து

# சந்தனவர்த்தினி ஆற்றில் மணல் அள்ளிய வாலிபர் கைது

திண்டுக்கல், ஆக. 8

சாணார்பட்டி அருகே சந்தனவர்த்தினி ஆற்றில் மணல் அள்ளிய வாலிபர் கைது செய்யப்பட்டார்.

திண்டுக்கல் சாணார்பட்டி அருகே ராஜக்காபட்டி கிராம நிர்வாக அலுவலர் வசந்தகுமார் ரோந்து பணியில் ஈடுபட்டார்.

அப்போது ராஜக்காபட்டியில் உள்ள சந்தனவர்த்தினி ஆற்றில் பண்ணைப்பட்டியை சேர்ந்த ஜெயசூர்யா மணிகண்டன் (22) என்பவர் மணல் அள்ளியது தெரியவந்தது.

இதுகுறித்து சாணார்பட்டி போலீஸ் நிலையத்தில் வசந்தகுமார் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சீராஜூதீன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று ஜெயசூர்யா மணிகண்டனை கைது செய்தனர்.

மேலும் அவர் மணல் அள்ளிய டிராக்டர் பறிமுதல் செய்யப்பட்டது.

# எடையளவு சரியில்லாத தராசுகள், கற்கள் பறிமுதல்

தஞ்சாவூர், ஆக. 8

தஞ்சாவூர் இறைச்சி, பழக்கடைகளில் தொழிலாளர்துறை அதிகாரிகள் ஆய்வு செய்ததில் எடையளவு சரியில்லாத தராசுகள், எடைகற்கள் பறிமுதல் செய்யப்பட்டது. ஆய்வு தஞ்சை நுகர்வோர் அமைப்புகளிடம் இருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் திருச்சி கூடுதல் தொழிலாளர் துறை ஆணையர் ஜெயபாலன், இணை ஆணையர் திவ்யநாதன் ஆகியோரது அறிவுரைகளின் படி தஞ்சை தொழிலாளர் துறை உதவி ஆணையர் (அமலாக்கம்) கமலா தலைமையில் துணை ஆய்வாளர்கள், உதவி



ஆய்வாளர்கள் மற்றும் முத்திரை ஆய்வாளர்கள் இணைந்து போலீஸ் பாதுகாப்புடன் தஞ்சை பாம்பாட்டித்தெரு, ஆட்டுமந்தைதெரு, பழைய பஸ் நிலையம், புதிய பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள மீன், இறைச்சி கடைகள் மற்றும் பழக்கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின்போது பல கடைகளில் சோதனை எடைகற்கள் கொண்டு உபயோகத்தில் இருந்த தராசுகளில் சரிபார்க்கப்பட்டதில் அளவு சரியாக இருந்தது. மேலும் மறுமுத்திரையிடப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் எடையளவு சரியாக இல்லாத மறுமுத்திரை இடப்படாத 10 மின்னணுதராசுகள், 5 மேசை தராசுகள், 20 இரும்பு எடைகற்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

வணிகர்கள் தங்கள் கடைகளில் வியாபாரத்திற்கு பயன்படுத்தி வரும் எடைஅளவுகளை தவறாது மறுமுத்திரையிட்டு பயன்படுத்தி கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என தொழிலாளர்துறை உதவி ஆணையர் கமலா தெரிவித்துள்ளார்.

# தபால் நிலையங்களில் தேசியக்கொடி விற்பனை

கோவை, ஆக. 8

கோவை சுதந்திர தினத்தை முன்னிட்டு கோவை தபால் நிலையங்களில் தேசியக்கொடி விற்பனை தொடங்கியுள்ளது. மேலும் இபோஸ்ட் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தபால் நிலையங்களில் விற்பனை Also Read டி.வி. ரிமோட்டை உடைத்ததால் பெற்றோருக்கு பயந்து 7ம் வகுப்பு மாணவி தற்கொலை..! சுதந்திர தினத்தை முன்னிட்டு அனைத்து வீடுகளிலும் தேசியக்கொடி ஏற்ற வேண்டும் என பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார். இதனை தொடர்ந்து மக்களும் தங்கள் வீடுகளில் தேசியக்கொடி ஏற்றுவதற்கு தயாராகி வருகிறார்கள். இந்த நிலையில் தற்போது நாடு முழுவதும் தேசியக்கொடியின் விற்பனை தொடங்கி நடந்து வருகிறது. இதனை முன்னிட்டு தபால் அலுவலகங்களில் தேசியக்கொடி விற்பனைகளைகட்டி உள்ளது.

கோவையில் ஆர்.எஸ். புரம், குட்ஷெட் ரோடு ஆகிய பகுதிகளில் தலைமை தபால் நிலையங்கள் உள்ளன. இதுதவிர மாவட்டம் முழுவதும் 80 துணை தபால் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

கோவையில் உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் தேசியக் கொடி விற்பனை நேற்று தொடங்கியது. அங்கு ஒரு தேசியக்கொடி ரூ.25க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நேற்று பெரும்பாலானோர் தபால் நிலையங்களில் தேசியக்கொடியை வாங்கி சென்றனர்.

இதுகுறித்து கோவை தபால் அதிகாரி ஒருவர் கூறியதாவது: கோவையில் உள்ள தபால் அலுவலகங்களில் ஆண்டுதோறும் தேசியக்கொடி விற்பனை நடந்து வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டும் விற்பனையை தொடங்கி உள்ளோம். பொதுமக்கள் வீட்டில் இருந்தபடியும் தேசியக் கொடி வாங்குவதற்காக இபோஸ்ட் வசதியை பயன்படுத்தலாம். இதற்காக அவர்கள் விண்ணப்பித்தால் தபால் அலுவலக ஊழியர்களே நேரில் சென்று தேசியக் கொடியை ஒப்படைப்பார்கள். கோவையில் உள்ள தபால் அலுவலகங்களில் விற்கப்படும் தேசியக்கொடிக்கு மாவட்ட அளவில் மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே நடப்பாண்டு சுமார் 40 ஆயிரம் தேசியக்கொடியை விற்பனை செய்வது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஊத்துக்குளி அருகே பள்ளத்திற்குள் பாய்ந்த மோட்டார் சைக்கிள்: வாலிபர் பலி

ஊத்துக்குளி, ஆக. 8

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ளசீனாபுரத்தை சேர்ந்த பழனிசாமி மகன் பூபதி (வயது 26), துரைசாமி மகன் தினேஷ் (வயது 28), மாச நாயக்கர் மகன் சோமசுந்தரம் . இவர்கள் 3 பேரும் சம்பவத்தன்று ஒரே மோட்டார் சைக்கிளில் சென்றனர். பூபதி மோட்டார் சைக்கிளை ஓட்டினார். அவருக்கு பின்னால் தினேஷ் மற்றும் சோமசுந்தரம் அமர்ந்து பயணம் செய்தனர். பூபதி வண்டியை வேகமாக ஓட்டியதாக தெரிகிறது. ஊத்துக்குளி அருகே உள்ள மல்லாங்காட்டு புதூர் பிரிவு, சின்னையம் கவுண்டம்பாளையம் அருகே வந்த போது அங்கு ரோட்டில் பாலம் கட்டுவதற்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறி கட்டுப்பாட்டை இழந்து விழுந்தது. இதில் 3 பேரும் தூக்கி வீசப்பட்டனர். உடனே அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் பூபதி இறந்துவிட்டதாக தெரிவித்தனர். மற்ற 2 பேருக்கு அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக தினேஷ், கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையிலும், சோமசுந்தரம் சத்தியமங்கலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து ஊத்துக்குளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆட்டுக்கொட்டகை அமைக்க விருப்பமா? மக்களுக்கு போடிப்பட்டி ஊராட்சி அழைப்பு

உடுமலை, ஆக. 8

ஊராட்சி மன்ற அலுவலத்திற்கு நேரில் சென்று தகுதி நிலை அறிந்து விண்ணப்பிக்கலாம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொது மக்களுக்கு இலவசமாக பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.



உடுமலையைஅடுத்த போடிப்பட்டி ஊராட்சியில் 2023 24 ம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொது மக்களுக்கு இலவசமாக பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதன்படி 5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாய நிலங்களில் இலவச கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளுதல், தனிநபர் இல்லங்களில் வரப்பு மற்றும் வட்டப்பாத்தி அமைத்தல், தரிசு நிலங்கள் மேம்பாடு செய்தல் மற்றும் சமன் செய்தல், மாடு மற்றும் ஆட்டு கொட்டகை அமைத்தல், கோழிப்பண்ணைகள் அமைத்து தருதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளது. இந்த திட்டத்தில் மூலம் பயனடைய விரும்பும் பொதுமக்கள் ஊராட்சி மன்ற அலுவலத்திற்கு நேரில் சென்று தகுதி நிலை அறிந்து விண்ணப்பிக்கலாம் என்று ஊராட்சி மன்ற நிர்வாகம் அறிவித்து உள்ளது

# வெள்ளகோவிலில் சிறப்பு தடுப்பூசி முகாம்

வெள்ளகோவில், ஆக. 8

தீவிர மிஷன் இந்திர தனுஷ் திட்டத்தின் கீழ் தடுப்பூசி முகாம் நடக்கிறது. 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் விடுபட்டு போன தடுப்பூசி தவணைகளை செலுத்திக்கொள்ளலாம். வெள்ளகோவில் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் தீவிரமிஷன்இந்திரதனுஷ் திட்டத்தின் கீழ் தடுப்பூசி முகாம் இன்று முதல் 12 ந்தேதி வரை நடக்கிறது.

எனவே 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் விடுபட்டு போன தடுப்பூசி தவணைகளை செலுத்திக்கொள்ள இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டுமாறு வட்டார மருத்துவ அலுவலர் டி.ராஜலட்சுமி கேட்டுக் கொண்டுள்ளார்.


நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்களுக்கு அணுகவும்
தொடர்புக்கு: 94436 99066





முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கீழ்பெண்ணாத்தூர் தெற்கு ஒன்றியம் சார்பில் நாடழகானந்தல் ஊராட்சியில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர், தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் ஏழுமலை, மோசஸ் கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக, உடன்பிறப்புகள்ஊர் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# கான்கிரீட் தளம் அமைக்க எதிர்ப்பு: கீழ்பவானி வாய்க்கால் விவசாயிகளின் போராட்டம் தீவிரம்

காங்கயம், ஆக. 8

கீழ்பவானி வாய்க்கால் பவானிசாகர் அணையில் இருந்து சுமார் 200 கிலோ மீட்டர் நீளத்துக்கு இரு கரைகளிலும் முழுக்க மண்ணால் கட்டப்பட்டது. இதன்மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

இந்த வாய்க்காலில் ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதம் 15ந் தேதி முதல் டிசம்பர் 15ந் தேதி வரை மற்றும் ஜனவரி 1ந் தேதி முதல் ஏப்ரல் 15ந் தேதி வரை என 2 முறை பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த 2013ம் ஆண்டு தமிழக அரசு கீழ்பவானி கால்வாயின் கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த முயன்றது. இந்த திட்டத்தை தொடங்கினால் கீழ்பவானி பாசன பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டல் கடுமையாக பாதிக்கும் என கூறி ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இதனால் தற்காலிகமாக அந்த திட்டம் கைவிடப்பட்டது. இந்த நிலையில் கடந்த மே மாதம் 1ந் தேதி அன்றுமீண்டும்கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் மற்றும் பக்கவாட்டு சுவர் அமைக்க அரசு திட்டமிட்டது.

இதுகுறித்த அறிந்த அந்த பகுதி விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் நேற்று நம்பியூர் அருகே உள்ள நடுப்பாளையம் கீழ்பவானி வாய்க்கால் பகுதியில் கரும்பு, தேங்காய், வாழைத்தாருடன் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் வாய்க்காலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது கீழ்பவானி வாய்க்காலில் ஆகஸ்டு 15 ந் தேதி தண்ணீர் திறக்க வேண்டும். அதற்கான அரசாணையை வருகிற 10ந் தேதி வெளியிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினார்கள். இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, 'எங்களது கோரிக்கைகளை ஏற்காவிட்டால் வருகிற 11ந் தேதி ஈரோட்டில் உள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தை ஆயிரக்கணக்கான விவசாயிகள் முற்றுகையிடுவோம். மேலும் வாக்காளர் அடையாள அட்டையை ஒப்படைத்து வருகிற 2024ம் ஆண்டு நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலை இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் புறக்கணிப்போம் என்றனர்.

# ஊத்துக்குளி கோல்டன்நகர் ரெயில்வே சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்குவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

ஊத்துக்குளி, ஆக. 8

திருப்பூரில் இருந்து ஊத்துக்குளி செல்லும் ரோட்டில் பாளையக்காடு உள்ளது. இங்கிருந்து கோல்டன் நகர் செல்லும் பாதையில் ரெயில்வே பாலத்தில் இருந்து ஆர்.எஸ்.புரம், பண்டிட்நகர், எம்.ஜி.ஆர். காலனி, ஆர்.கே.ஜி.நகர், சத்யாகாலனி, சூர்யா காலனி ,சஞ்சய் நகர், கருணாபுரி ஆகிய காலனிகள் உள்ளது. இவை அனைத்தும் கோல்டன்நகரை உள்ளடக்கிறது. ஆரம்ப காலத்தில் முட்புதர்கள்நிறைந்து தனி காடாக காட்சி அளித்தது. இந்த பகுதிக்குள் மக்கள் குடியேற மிகவும் அச்சப்பட்டனர். இன்று மக்கள் தொகை அதிகம் கொண்ட திருப்பூர் மாநகரில் இதுவும் ஒரு பகுதியாக உருவா



கியுள்ளது. சுமார் 30,000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். இந்நிலையில் பாளையக்காட்டில் இருந்து கோல்டன் நகர் செல்லும் ரெயில்வே பாலத்தின் கீழ் மழைக்காலங்களில் மழை தண்ணீர் வெள்ளம் போல் தேங்கி காட்சி அளிக்கிறது. இதனால் நடந்து செல்பவர்கள் முதல் வாகனத்தில் செல்பவர்கள் வரை பாதையை கடக்க முடியாமல் நீந்தி செல்ல வேண்டிய அவலம் ஏற்படுகிறது. வயதானவர்கள் வீட்டில் முடங்கி இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அதுமட்டுமின்றி பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். அவசரத் தேவைக்காக அழைக்கும் ஆம்புலன்ஸ் கோல்டன் நகருக்குள் வருவதில்லை. இதனால் உரிய நேரத்தில் மருத்துவசிகிச்சைகிடைக்காமல் உயிரிழப்புகள் ஏற்படும் அபாயம் ஏற்படுகிறது. மேலும் கோல்டன் நகரில் உள்ள குடியிருப்புகளின் ரோடுகள் மிகவும் மேடு பள்ளங்களாக காணப்படுகின்றன. இது குறித்து அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பல்லடத்தில் இருந்து கோவைக்கு கூடுதல் பஸ்கள் இயக்க கோரிக்கை

பல்லடம், ஆக. 8

பல்லடம் நகரம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. விசைத்தறி மற்றும் கறிக்கோழி உற்பத்தி உள்ளிட்ட தொழில்கள் வளர்ச்சி காரணமாக மக்கள் தொகைப் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்தநிலையில் பல்லடத்தில் இருந்து கோவை செல்வதற்கு சாலை மார்க்கமாக மட்டுமே செல்ல முடியும். பல்லடம் வழியாக எங்கும் ரெயில் போக்குவரத்து இல்லை. இந்த நிலையில்



காலை நேரங்களில், கல்லூரி செல்லும் மாணவ மாணவிகள், வேலைக்குச் செல்பவர்கள் என கோவைக்கு பஸ்களில் அதிகம் பேர் செல்கின்றனர். இந்த நிலையில், பல்லடம் வழியாக கோவை செல்லும் அனைத்து பஸ்களிலும் கூட்டம் அலை மோதுகிறது.

இதனால் கல்லூரி மாணவர்கள் படிக்கட்டுகளில் தொங்கி கொண்டு செல்கின்றனர். இதன் மூலம் விபத்துக்கள் ஏற்பட்டு பலர் உயிரிழந்துள்ளனர். எனவே காலை நேரங்களில் பல்லடத்தில் இருந்து கோவைக்கு கூடுதலாக பஸ்களை இயக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெள்ளகோவிலில் வாகனத்தில் சேலை சிக்கி கீழே விழுந்த பெண் சாவு

வெள்ளகோவில், ஆக. 8

வெள்ளகோவில் காமராஜபுரத்தை சேர்ந்தவர் பழனிச்சாமி.கூலி தொழிலாளி. இவரது மனைவி ஈஸ்வரி (56). சம்பவத்தன்று வெள்ளகோவில் தாராபுரம்ரோட்டில்சேரன் நகர் அருகே கணவன் மனைவி இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். பின்னால் அமர்ந்திருந்த ஈஸ்வரியின் சேலை எதிர்பாராத விதமாக இருசக்கர வாகனத்தின் பின் டயரில் சிக்கியது. இதில் நிலைதடுமாறி கீழே விழுந்த ஈஸ்வரிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அந்த பகுதியை சேர்ந்தவர்கள் அவர்களை மீட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த ஈஸ்வரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து வெள்ளகோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலப்பாக்கம் சண்முகம் மறைவு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஆக. 8

கருணாநிதி நினைவு அமைதி பேரணியில் பங்கேற்ற 146வது வார்டு தி.மு.க. கவுன்சிலர் ஆலப்பாக்கம் சண்முகம் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். கவுன்சிலர் ஆலப்பாக்கம் சண்முகம் உயிரிழந்தார் என்ற செய்தியை கேட்டு அதிர்ச்சியும், துயரும் அடைந்தேன்.



முன்னாள்முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நினைவு அமைதி பேரணியில் பங்கேற்ற 146வது வார்டுதி.மு.க. கவுன்சிலர் ஆலப்பாக்கம் சண்முகம் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். அவரது மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், கலைஞர் கருணாநிதி நினைவு அமைதி பேரணியில் மயங்கி விழுந்து கவுன்சிலர் ஆலப்பாக்கம் சண்முகம் உயிரிழந்தார் என்ற செய்தியை கேட்டு அதிர்ச்சியும், துயரும் அடைந்தேன். மதுரவாயல் பகுதியில் கழகம் வளர்த்த செயல்வீரரான சண்முகத்தை இழந்து வாடும் அவரது குடும்பத்தார், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.

# ஆன்லைன் விளையாட்டுக்கு தடை விதித்தது ஏன்? ஐகோர்ட்டில் தமிழக அரசு வாதம்

சென்னை, ஆக. 8

தமிழகத்தில்ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட ஆன்லைன் சூதாட்டங்களுக்கு தடை விதித்து சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்களின் சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசாங்கம் சார்பில் முன் வைக்கப்பட்ட வாதங்களின் விவரங்கள்: இந்தவிளையாட்டுபொது ஒழுங்கிற்கு இடையூறு ஏற்படுத்துவதால் அரசாங்கம்



தடை விதித்துள்ளது. இது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான முடிவு. ரம்மி விளையாட்டை நேரில் விளையாடும் போதுதான் அதை திறமைக்கான விளையாட்டாக கருத முடியும். இந்த விளையாட்டை வடிவமைத்த தொழில்நுட்ப வல்லுனர்கள் இதில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துகின்றனர். விளையாடுவோரின் சுய அறிவிப்பு எப்படி சரி பார்க்கப்படுகிறது என இந்த நிறுவனங்கள் விளக்குவதில்லை. மேலும் விளையாடுபவர்கள் தாங்கள் வென்ற முழு தொகையையும் தாங்களே எடுத்து கொள்ள முடியாது. ஒரு பகுதியை ஆன்லைன் நிறுவனங்கள் எடுத்து கொள்ளும். நேரடியாக விளையாடும்போது முழு பணமும் கையில் கிடைக்கும். இவ்வாறு அரசாங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அரசாங்கத்தின் சார்பாக அட்வகேட் ஜெனரல் சண்முகசுந்தரமும், மூத்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கபில் சிபல் ஆகியோர் ஆஜராகிறார்கள். இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை இம்மாதம் 14ம் தேதிக்கு நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

# கொரட்டூரில் கழிவுநீர் சேகரிப்பு நிலையத்தால் தவிக்கும் குடியிருப்பு வாசிகள்: துர்நாற்றம் தொடர்ந்து வீசுவதால் அவதி

சென்னை, ஆக. 8

கொடுங்கையூரில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு குழாய் மூலம் அனுப்பப்படுகிறது. தேசிய பசுமை தீர்ப்பாயம் ஏற்கனவே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பம்பிங் நிலையங்கள் பராமரிப்பு தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கி இருக்கிறது.

சென்னை கொரட்டூரில் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியம் சார்பில் கழிவுநீர் சேகரிப்பு நிலையம் அமைத்து பராமரிக்கப்படுகிறது. 22 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட மிகப்பெரிய இந்த சேகரிப்பு நிலையத்துக்கு நகரில் கழிவு நீரகற்று வாரியத்தால் சேகரிப்படும் கழிவு நீர் கொண்டுவரப்பட்டு சேகரிக்கப்படுகிறது. இங்கிருந்து கொடுங்கையூரில் உள்ளகழிவுநீர்சுத்திகரிப்பு நிலையத்துக்கு குழாய் மூலம் அனுப்பப்படுகி



றது. இந்த கழிவுநீர் சேகரிப்பு நிலையம் அருகே 222 வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கடந்த 2019ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த குடியிருப்புகளில் வசிப்பவர்கள் கழிவுநீர் சேகரிப்பு நிலையத்தில் இருந்து வெளிவரும் துர்நாற்றம் மற்றும் வாயு கசிவுகளால் தொடர்ந்து அவதிப்பட்டு வருகிறார்கள். இது தொடர்பாக பொது மக்கள் சார்பில் புகார்கள் தெரிவிக்கப்பட்டதும் அவ்வப்போது தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் மீண்டும் மீண்டும் துர்நாற்றம் வெளிவருவதாக பொது மக்கள் புகார் கூறுகிறார்கள். குடியிருப்பு வாசிகள் கூறும்போது, நாங்கள் இந்த பகுதியில் வீடு வாங்கி குடியேறியபோது வேறு எந்த பிரச்சினையும் இல்லை. துர்நாற்றம் வெளி வருவது, வாயு கசிவு ஏற்படுவது பற்றி புகார் செய்ததும், வீட்டு வசதி வாரியம் தற்காலிகமாக குடியிருப்பை சுற்றி தடுப்பு நடவடிக்கையாக சில கட்டமைப்புகளை ஏற்படுத்தியது. அதனால் எந்த பலனும் ஏற்படவில்லை என்றனர். அந்த பகுதியின் கவுன்சிலர் ஜான் கூறும்போது, இந்த பிரச்சினை பற்றி பல முறை மாநகராட்சி கூட்டத்திலும் கேள்வி எழுப்பி இருக்கிறேன். பம்பிங் நிலையத்தை இங்கிருந்து மாற்ற முடியாது. துர்நாற்றம் வெளியேறுவதை தடுக்க மெட்ரோ வாட்டர் நிர்வாகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார். தேசிய பசுமை தீர்ப்பாயம் ஏற்கனவேகழிவுநீர்சுத்திகரிப்பு நிலையங்கள், பம்பிங் நிலையங்கள் பராமரிப்பு தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கி இருக்கிறது. அதன் அடிப்படையில் சில ஆய்வுகள் நடத்தி வருவதாகவும் விரைவில் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பூண்டி ஏரி பகுதியில் சிதிலமடைந்து காணப்படும் சிறுவர் பூங்கா சீரமைக்கப்படுமா?

சென்னை, ஆக. 8

சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக திருவள்ளூர் அடுத்த பூண்டியில் கொசஸ்தலை ஆற்றின் நடுவில் 10க்கும் மேற்பட்ட கிராமங்களை அகற்றி 1944ல் சத்திய மூர்த்தி நீர்த்தேக்கம் கட்டி திறக்கப்பட்டது. இந்த நீர்த்தேக்க பகுதியில் பல நூறு ஆண்டுகளுக்கு முந்தைய ஆதிமனிதர்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் கொண்ட அருங்காட்சியகம், பல்வேறு அணைக்கட்டு மாதிரிகள் இடம் பெற்ற நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வு மையம் ஆகியவையும் இங்குள்ளன. மேலும் நீர்த்தேக்கத்துக்கு நடுவில் இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஊன்றீஸ்வரர் கோவிலும் அகற்றப்பட்டு பூண்டி பஸ் நிலையம் அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது. இந்த அணையில் நீர்வற்றும்போது பழமையான ஊன்றீஸ்வரர் கோவிலைக் காணலாம். இது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக விளங்குவதால், நாள்தோறும் பல்வேறு பகுதியில் இருந்து குழந்தைகள், முதியவர்கள், மாணவமாணவிகள் என சுற்றுலா பயணிகள் அதிகம் பேர் வந்து செல்லும் இடமாகவும் உள்ளது. பூண்டி சத்திய மூர்த்தி நீர்த்தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவு 3,231 மில்லியன்கனஅடி. பரப்பளவு 121 சதுர கி.மீ ஆகும். பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பினால் உபரி நீரை வெளியேற்றுவதற்காக 16 மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அணையில் இருந்து திறக்கப்படும் உபரி நீர் கொசஸ்தலை ஆறு வழியாக வெளியேற்றப்படுகிறது. மேலும் கனமழை மற்றும் கிருஷ்ணா நீர் வரத்தால் அணை நிரம்பினால் பேபி கால்வாய் மற்றும் பிரதான இணைப்பு கால்வாய் மூலம் சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படும். வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த பூண்டி




நீர்த்தேக்கம் மக்களின் முக்கிய சுற்றுலாத்தலமாகவும் விளங்குகிறது. இங்குள்ள பூங்காவில் பெரியோர்கள் மற்றும் குழந்தைகளைக் கவரும் விளையாட்டு ஊஞ்சல்கள், அமரும் இருக்கைகள் போன்றவை இருந்தன. எனினும் இப்பூங்கா தற்போது போதிய பராமரிப்பின்றி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் இனி வருங்காலத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அடிப்படை வசதிகள் மற்றும் சேதமடைந்த பூங்கா, சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை சீரமைக்க வேண்டும். இதுபோன்று செய்வதன் மூலம் வருங்காலத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலா பயணிகளும் சமூக ஆர்வலர்களும் வலியுறுத்தியுள்ளனர். பூண்டியில் நீர்த்தேக்கம் அமைப்பதற்காக இப்பகுதியைத் தோண்டியபோது கிடைத்த பழங்காலப் பொருள்களைக் கொண்டு ஓர் அருங்காட்சியகம். இங்கு அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகளில் இருந்து கல்லூரி மாணவ, மாணவிகள் ஆராய்ச்சிக்காக இந்த அருங்காட்சியகத்துக்கு வந்து செல்கின்றனர். இந்த அருங்காட்சியகத்தில் ஒன்றரை லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய கற்களால் ஆன ஆயுதங்கள் மற்றும் முதுமக்கள் தாழி போன்றவையும் இடம் பெற்றுள்ளன. மேலும் பூண்டிக்கு அருகிலுள்ள கொசஸ்தலை ஆற்றுப் பள்ளத்தாக்கு பகுதியிலும் அதையடுத்துள்ள அல்லிக்குழி மலைத்தொடரின் சமவெளிப் பகுதிகளிலும் சுமார் 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் கற்கால மனிதர்கள் வாழ்ந்தனர் என்பதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இதைக் கருத்தில்கொண்டு பூண்டி நீர்த்தேக்கம்அமைந்துள்ள பகுதியில் தொல்லியல் துறை சார்பில் தமிழகத்தின் தொன்மையை விளக்கும் வகையில் தொல் பழங்கால அகழ்வைப்பகம் செயல்பட்டு வருகிறது. இந்த அகழ்வைப்பகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக பழைய கற்காலக் கருவிகள் நுண்கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவிகள், பெருங்கற்காலத்தைச் சார்ந்தபெரியஈமப்பேழை கல்மரம், நிலவியல் படிமங்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பூண்டி ஏரிக்கரை மீது சேதமடைந்த பூங்காவை தரம் உயர்த்தும் வகையிலும், சிறுவர்களை ஈர்க்கும் வகையிலும் நவீன அறிவியல் தொழில்நுட்ப உபகரணங்கள், டைனோசர், செல்பி பாயிண்ட், விளையாட்டு உபகரணங்கள் அமைக்கவும் ரூ.80 லட்சம் ஒதுக்கி அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் நீர்த்தேக்க வளாகத்தில் 4 ஏக்கர் பரப்பளவில் சத்தியமூர்த்தி திருவுருவச்சிலையுடன் அறிவியல் பூங்கா சிறுவர்களை ஈர்க்கும் வகையில் செயல்பட்டு வந்தது. இங்குசிறுவர்கள்பொழுது போக்கும் வகையில் அறிவியல் உபகரணங்கள், குடை ராட்டினம், ஏற்ற இறக்கம் மற்றும் சம விளையாட்டு, குதிரை சவாரி ராட்டினம், ஊஞ்சல் விளையாட்டு, பூங்கா நீரூற்று, இருக்கைகள் போன்ற பொழுது போக்கு அம்சங்களும் இருந்தது. அதனால் அதிகம் பேர் வந்து செல்லும் இடமாகவும் இருந்தது. ஆனால், திறந்த வெளியில் இருந்ததால், போதிய பராமரிப்பின்றிசமூகவிரோதிகளின் புகலிடமாகவே மாறியது. அதோடு, கால்நடைகளும் புகுந்து விடுவதால் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் ஆகியவைகள் சேதமடைந்தது. இந்த நிலையில் பூங்காவை சீரமைத்து குழந்தைகளின் பயன்பாட்டிற்கு அறிவியல் பூங்காவை நவீன முறையில் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ரூ.80 லட்சமும் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற் கொண்டனர். ஆனால் இதுவரை அறிவியல் பூங்கா பொது மக்களின் பயன்பாட்டிற்கு வரவில்லை. தற்போது இந்த அறிவியல் பூங்காவை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் சேதமடைந்த நீரூற்றுகள், சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்கள், இருக்கைகள் சீரமைக்கப்படும். அதேபோல், நவீன முறையில் குழந்தைகள் அறிவு பூர்வமாக கற்றதை நேரடியாக செயல் விளக்கம் மூலம் பெறும் நியூட்டன் இயக்க விதி போன்ற பல்வேறு அறிவியல் உபகரணங்கள் நிறுவப்பட உள்ளது. மேலும் டைனோசர், பூங்காவிற்கு வந்து செல்வோர் நினைவாக சுயபடம் எடுத்துக் கொள்ளும் வகையில் செல்பி பாயின்ட் ஆகியவை அமைக்கப்பட உள்ளது. மேலும் பூண்டி நீர்த் தேக்கத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தேவையான பணிகளை மேம்படுத்தினால் அதிகளவு சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

# கலைஞர் என்னுடைய ஆசான் என்பதில் பெருமை கொள்கிறேன் குஷ்பு

கோவை, ஆக. 8

அமெரிக்கா போன்ற நாடுகளில் பிரதமர் மோடிக்குநல்லவரவேற்பு உள்ளது. ஆடை சுதந்திரம் இருக்கலாம், மனிதராக பிறந்துள்ளதால் ஒரு எல்லையுடன் இருக்க வேண்டும்.

கோவை பீளமேடு பகுதியில் மக்கள் சேவை மையம் சார்பில், கல்லூரி மாணவிகளுக்கு இடையேயான கைத்தறி ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பா.ஜ.க.



தேசிய மகளிர் ஆணைய தலைவர் வானதி சீனிவாசன் மற்றும் தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு ஆகியோர் பரிசுகளை வழங்கினர். இதையடுத்து செய்தியாளர்களை சந்தித்த குஷ்பு கூறியதாவது: கலைஞர் என்னுடைய ஆசான் என்பதில் பெருமை கொள்கிறேன். அவரைப் பற்றி பேசுவது என்றால் நாள் முழுக்க பேசலாம், நான் அங்கிருந்து வந்தவள், அவரைப் பற்றி நன்றாக தெரியும். அமெரிக்கா போன்ற நாடுகளில் பிரதமர் மோடிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஆடை சுதந்திரம் இருக்கலாம், மனிதராக பிறந்துள்ளதால் ஒரு எல்லையுடன் இருக்க வேண்டும். எனக்கான எல்லை என்பது புடவை அணிவதுதான் என்றார்.

# சேலத்து மாரியம்மன் கோவிலில் ஆடிமாத கஞ்சி கலய ஊர்வலம்

அரூர்,, ஆக.8

விரதமிருந்த ஏராளமான பக்தர்கள் மேல தாளம் முழங்க கஞ்சி கலயத்தை தலையில் சுமந்தபடி ஊர்வலமாக சென்று கோவிலை வந்தடைந்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தருமபுரி மாவட்டம், அரூர் அருகே தரிப்பள்ளி ஏழுமலை நகரில் சேலத்து மாரியம்மன் கோவில் உள்ளது. சுற்றுவட்டாரத்தில் பிரசித்திபெற்ற இக்கோயிலின் நடப்பாண்டு ஆடி மாத திருவிழா கடந்த



வாரம் கொடியேற்றத்துடன் துவங்கியது. இதனை தொடர்ந்து அம்மனுக்கு மூன்று கால பூஜை நடைபெற்றது. கடந்த 1ம் தேதி ஆடி பவுணர்மி அன்று அம்மனுக்கு கூல் கூற்றும் நிகழ்ச்சி நடந்து. இதனை தொடர்ந்து திருவிழாவின் முக்கிய நிகழ்வாக கஞ்சி கலய ஊர்வலம் நடைபெற்றது. இதில் காப்பு கட்டி விரதமிருந்த ஏராளமான பக்தர்கள் மேல தாளம் முழங்க கஞ்சி கலயத்தை தலையில் சுமந்தபடி ஊர்வலமாக சென்று கோவிலை வந்தடைந்தனர். இதனை தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்காரம், பூஜை நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதனை தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது. நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை கோயில்நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# தி.மு.க சார்பில் கருணாநிதி 5ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு

கிருஷ்ணகிரி, ஆக. 8

மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. கருணாநிதியின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். பின்னர்கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் வரை ஊர்வலமாக சென்று



அண்ணா உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாவட்டதுணைச்செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரிகடலரசுமூர்த்தி, நகர செயலாளர் நவாப், நகர் மன்ற தலைவர் பரிதா நவாப், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், உட்பட தி.மு.க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் பள்ளி வகுப்பறையில் சிமெண்டு பெயர்ந்து விழுந்ததில் 5 மாணவர்கள் காயம்

காஞ்சிபுரம், ஆக. 8

மாணவர்கள் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்திருப்பதை கண்டு அவர்களது பெற்றோர் ஆத்திரம் அடைந்தனர். இன்று காலை பள்ளிக்கு வந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர் பள்ளியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குன்றத்தூரை அடுத்த கோவூரில் தனியார் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை பள்ளியில் உள்ள யூ.கே.ஜி. வகுப்பறையின் மேற்கூரை சிமெண்டு பூச்சு திடீரென பெயர்ந்து விழுந்தது. இதில் 5 மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டது. இதையடுத்து காயம் அடைந்த மாணவர்களின் பெற்றோருக்கு பள்ளி நிர்வாகம் தகவல் தெரிவிக்காமல் மாணவர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களை வீட்டுக்கு அனுப்பியதாக தெரிகிறது. மாணவர்கள் காயம் அடைந்து சிகிச்சைபெற்று வந்திருப்பதை கண்டு அவர்களது பெற்றோர் ஆத்திரம் அடைந்தனர். இதைத்தொடர்ந்து இன்று காலை பள்ளிக்கு வந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர் பள்ளியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் பள்ளி நிர்வாகிகளிடம் கடும் வாக்குவாதம் செய்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்ததும் மாங்காடு போலீசார் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் பெற்றோரிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். இதையடுத்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணி தீவிரம் சென்னையில் 10 ஆயிரம் சிலைகள் நிறுவ முடிவு

சென்னை, ஆக. 8

விநாயகர் சதுர்த்தி விழா ஒவ்வொரு ஆண்டும் இந்து அமைப்பினர் மற்றும் பொதுமக்களால் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டும் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட பல்வேறு அமைப்பினரும் தீவிரமாக தயாராகி வருகிறார்கள். இதையடுத்து விநாயகர் சிலை தயாரிப்பு பணிகள் தமிழகம் முழுவதும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. சென்னையில் கொசப்பேட்டை பகுதியில் விநாயகர் சிலைகள் தயாரிக்கப்பட்ட போதிலும் பெரிய அளவிலான சிலைகளின் பாகங்கள் வெளியூர்களில் இருந்தே வரவழைக்கப்பட்டு ஒன்றாக்கி பின்னர் விற்பனை செய்யப்படுகிறது. திருத்தணி, பொன்னேரி உள்ளிட்ட பகுதிகளிலும் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. பண்ருட்டி, கள்ளக்குறிச்சி பகுதிகளிலும் அதிக அளவில் விநாயகர் சிலைகள் தயாராகி வருகிறது. சென்னை பகுதியான எர்ணாவூர் கிரிஜா நகரில் விநாயகர் சிலை தயாரிக்கும் பணிகளில் 15க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர். 3 அடியில் இருந்து 10 அடி உயரம் வரையிலான சிலைகள் இங்கு வடிவமைக்கப்பட்டு வருகிறது. இந்த பணியில் வெளியூர்களில் இருந்து ஆட்கள் வரவழைக்கப்பட்டு உள்ளனர். எர்ணாவூரில் மட்டும் தற்போது 300 சிலைகளை



உருவாக்கும் பணிகள் நடந்து வருகின்றன. சிலைகளின் தலை, கைகள், உடல் பகுதி உள்ளிட்டவைகளை ஒன்றாக்கி வர்ணம் தீட்டி அதனை விற்பனைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. அடுத்த மாதம் 18ந்தேதி விநாயகர் சதுர்த்தி விழா தொடங்குகிறது. அன்று தமிழகம் முழுவதும் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைக்காக வைக்கப்படுகின்றன. பின்னர் இந்த சிலைகள் ஒரு வார காலம் வைத்து பூஜை செய்யப்படும். பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கடலில் கரைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை இந்து அமைப்பினர் தற்போதே தொடங்கியுள்ளனர். இந்து முன்னணி மற்றும் பாரத் இந்து முன்னணி அமைப்பினர் இது தொடர்பான ஆலோசனை கூட்டங்களை நேற்று நடத்தினர். இந்த கூட்டத்தில் 2 அமைப்புகளை சேர்ந்தவர்களும் தங்களது அமைப்புகளின் சார்பில் சென்னையில் தனித்தனியாக 5 ஆயிரம் சிலைகளை வைக்க முடிவு செய்துள்ளனர். இதன்மூலம் சென்னையில் மட்டும் இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் 10 ஆயிரம் சிலைகளை வைத்து பூஜை செய்ய உள்ளனர். இந்து முன்னணி சார்பில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மாநில பொறுப்பாளர்கள் பக்தன்ஜி, முருகானந்தம், கார்த்திகேயன், கிருஷ்ணமூர்த்தி, மணலி மனோகர், இளங்கோவன் மற்றும் விழா கமிட்டி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். செப்டம்பர் 18ந்தேதி தொடங்கும் விநாயகர் சதுர்த்தி விழாவை வெகு விமரிசையாக நடத்துவது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. விநாயகர் சதுர்த்தி செப்டம்பர் 17ந்தேதி அன்று விழாக் குழுவினர் அனைவரும் காப்பு கட்டி விரதம் தொடங்க முடிவு செய்யப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட இடையூறுகள் விநாயகர் பெருமான் அருளால் நல்ல முறையில் தீர்ந்தன. எனவே இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை சிறப்பாக இந்து சமுதாய திருவிழாவாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழாவின் மைய கருத்து "அன்னைத் தமிழைக் காக்க, ஆன்மீகத்தை வளர்ப்போம்" என்பதாகும். இக்கருத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கவும் இந்து முன்னணியினர் முடிவு செய்துள்ளனர். இதேபோன்று பாரத் இந்து முன்னணி அமைப்பின் ஆலோசனை கூட்டம் தலைவர் ஆர்.டி.பிரபு தலைமையில் நடைபெற்றது. சென்னை மாவட்டத்தில் மட்டும் 5 ஆயிரம் விநாயகர் சிலைகளை பிரதிஷ்டை செய்து சிறப்பான முறையில் பூஜைகள் செய்து 24ந்தேதி கடலில் கரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் மத்திய சென்னை மாவட்டம் சார்பில் வைக்கக்கூடிய விநாயகர் சிலைக்காக சென்னை புளியந்தோப்பு பட்டாளம் ஆஞ்சநேயர் கோவிலில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு பட்டினப்பாக்கம் கடற்கரையில் கரைக்கப்படுகிறது. வட சென்னை மாவட்டத்தில் வைக்கக்கூடிய விநாயகர் சிலையும், ஆர்.கே.நகர் தொகுதியில் ஒன்று கூடி காசிமேடு கடற்கரையிலும், தென் சென்னை மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் சார்பில் திருவேற்காடு பகுதிகளில் வைக்கக்கூடிய விநாயகர் சிலைகள் நீலாங்கரை கடற்கரையிலும் கரைப்பது என முடிவு செய்யப்பட்டு உள்ளது.

# காவிரியில் உரிய தண்ணீரை பெற்று தர கோரி ஆற்றின் நடுவே போராட்டம் நடத்திய அய்யாகண்ணு கைது

திருச்சி, ஆக. 8

தமிழக அரசு உடனடியாக காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விட வேண்டும், காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதை எதிர்த்தும் இதற்கு மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும், காவிரியில் தமிழகத்திற்கான உரிய தண்ணீரை பெற்றுத்தர தமிழக அரசை வலியுறுத்தியும் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில், மாநில துணைத்தலைவர் மேகராஜன் முன்னிலையில் விவசாயிகள் 11வது நாளாக இன்று போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தின் ஒரு பகுதியாக இன்று டெல்டா பகுதிகளில் கருகும் பயிர்



களைகாப்பாற்றுவதற்காக காவிரியில் தண்ணீர் திறந்து விட தமிழக அரசு கர்நாடகாவிடம் மற்றும் மத்திய அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி தண்ணீரை பெற்று தர வேண்டும்.

விவசாயிகளையும் விவசாயத்தையும் காக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி காவிரி ஆற்றின் மையப்பகுதியில் அங்கு உள்ள மணல் திட்டில் உடலை புதைத்துக்கொண்டு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவராமன் தலைமையிலான போலீசாரும், தீயணைப்பு படையினரும் ஆற்று நீரில் கயிறு கட்டி இறங்கி, போராட்டம் நடந்த மணல் திட்டுக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தை பலனளிக்காத நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை கைது செய்தனர். இதுகுறித்து அய்யாகண்ணு கூறும்போது, காவிரி டெல்டா பகுதிகளை பாலைவனமாக்கி, அதன்பின்னர் மீத்தேன் மற்றும் எரிவாயு எடுக்கும் நோக்கிலேயே மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இதனை உடனடியாக மத்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். உதவி ஆணையர்கள் அன்பு, நிவேதா லட்சுமி ஆகியோர் நேரில் சென்று பாதுகாப்பு பணிகளை செய்திருந்தனர்.

# கருணாநிதி 5ம் ஆண்டு நினைவு தினம்: முதல்வர் தலைமையில் தி.மு.க.வினர் அமைதி பேரணி

சென்னை, ஆக.8

மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதியின் நினைவு தினத்தை முன்னிட்டு முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையில் இன்று அமைதி பேரணி நடைபெறுகிறது. சென்னை, முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி, சென்னையில் திமுக தலைவரும் முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது. கருணாநிதியின் நூற்றாண்டு விழா



மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு ஜூன் 3ம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அண்ணாசாலை ஓமந்தூரார் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதி சிலையில் இருந்து அமைதிப் பேரணி தொடங்குகிறது. சென்னை மெரினா நினைவிடத்தில் உள்ள கருணாநிதி நினைவிடம் வரை இந்த பேரணி நடைபெறுகிறது. மெரினா நினைவிடத்தில் கட்சியினர் மரியாதை செலுத்துகிறார்கள்.

இந்த அமைதி பேரணியில் அமைச்சர்கள், எம்.பி., எம்எல்ஏக்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.









Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.